<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**In the Court of Judicial Magistrate No.II, Mettur**</u>

**Case No : ST.C. 568/2022**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 04.06.2024**

| | |
|---|---|
| **Name : ரவி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

<u>**முதல் விசாரணை**</u>

1) நான் குட்டிக்கவுண்டனூரில் குடியிருந்து தறி வேலை செய்கிறேன். அ.சா1 ஐ தெரியும். எதிரியை தெரியும். கடந்த 2020 ம் வருடம் மாலை 06.00 மணி சுமாருக்கு நான் நிதிநிறுவத்தில் பணம் செலுத்திவிட்டு அ.சா2 ராமசந்திரன் இருசக்கரவாகனத்தை ஓட்டிக்கொண்டும் நான் பின்னால் Splender வாகனத்தில் அமர்ந்து கொண்டு பயணம் செய்தோம். நாங்கள் இருவரும் காப்பரத்தான்பட்டி அருகில் செல்லும்போது சின்னப்பம்பட்டியிலிருந்து வந்த இரண்டு இருசக்கரவாகனத்தில், ஒரு வாகனத்தை ரமேஷ்.அச.1 ஓட்டிக்கொண்டும், அதன் பின்னால் பெரியண்ணன் என்பவர் அமர்ந்து கொண்டு வந்துபோது விபத்து நடந்தது.

2. விபத்தின் காரணமாக எனக்கு உதட்டில் காயமும், காலில் பின்னால் காயம் ஏற்பட்டது. அ.சா2 ராமசந்திரன் என்பவருக்கும் கால் எலும்பு முறிவு ஏற்பட்டது. எங்கள் இருவரையும் ஆம்புலன்ஸ் மூலமாக எடப்பாடி கார்த்திக் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். நாங்கள் இருவரும் 4 நாட்கள் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றோம். எந்த வாகனத்தில் வந்தவர்கள் மது அருந்தியிருந்தார்கள் என்றால் பெரியண்ணன் அமர்ந்து வந்த வாகனத்தின் ஓட்டுனர் ஆவார். பெரியண்ணன் அமர்ந்து வந்த வாகனத்தின் மீதுதான் தவறு

ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—</u>**

3. போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் எடப்பாடி கார்த்திக் மருத்துவமனையில் வைத்து என்னை விசாரித்தார்கள் . பிறகு என்னை விசாரிக்கவில்லை. அந்த விசாரணையில் நான் யார் யார் எந்தெந்த வாகனத்தை ஓட்டினார்கள், வாகனத்தின் எண் ஆகியவற்றை சொன்னேனா என்றால் இல்லை.

4. அ.சா1 ஓட்டி வந்த வாகனம் முன்னே வந்தது. அசா.3 ஓட்டிவந்த வாகனம் பின்னே வந்தது. எந்த வாகனம் எந்த வாகனத்தின் மீது மோதியது என்பதை நான் நேரடியாக பார்த்தேன். அ.சா1 ஓட்டி வந்த வாகனத்தின் பின்புறத்தில் அ.சா3 அமர்ந்திருந்த வாகனம் மோதியது. சம்பவத்தின்போது யார் யார் இருந்தார்கள் என்றால் அழகேசன் த/பெ காவேரி, பழனிசாமி த/பெ அண்ணாமலை ஆகியோர் சம்பவ இடத்தில் இருந்தார்களா என்றால் அடிப்பட்டவுடன் நான் மயங்கிவிட்டதால் எனக்கு நினைவில்லை.

5. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா2 ன் அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. அ.சா1 தான் எதிரி ஓட்டிவந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஓம்/—தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2,**
**மேட்டூர்.**